# பத்திரிக்கைச் செய்தி

அரசாணை நிலை எண்.62 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்(J1) துறை, நாள் 05.02.2021 ன்படி, புதிதாக துவங்கப்பட்டுள்ள அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அரியலூர் மாவட்டத்தில் உள்ள விருப்பமுள்ள ஆய்வக நுட்புநர் நிலை-2க்கான 34 காலிப்பணியிடங்களுக்கான கல்வித் தகுதி முறையே பல்கலைக் கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகதத்தால் வழங்கப்பட்ட வேதியியல் அல்லது உயிர் வேதியியல் பிரிவில் இளங்கலை பட்டம் அல்லது மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் பட்டயப்படிப்பு (இரண்டு ஆண்டுகள்) King Institute of Preventive Medicine அல்லது தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஓட்டுநருக்கான 2 காலிப்பணியிடங்களுக்கு கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மேலும் Heavy license உடன் 5 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வார்டு உதவியாளர், மருத்துவமனை பணியாளர், வண்டி தள்ளுநர், மற்றும் துப்புரவு பணியாளர் ஆகியோருக்கான காலிப் பணியிடங்கள் 8, 12, 6, 19 ஆகும். இப்பணியாளர்களுக்கான கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். மேற்கண்ட கல்வித் தகுதி மற்றும் முன் அனுபவமுள்ள 18 முதல் 45 வயதிற்குட்பட்ட நபர்கள் உடனடியாக முதல்வர், அரசு அரியலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரியலூர் அவர்களிடம் ஆதார் அட்டை நகல் மற்றும் கல்வித்தகுதி சான்றிதழ் நகல்களுடன் (Attested only – சான்றொப்பம் பெற்றது) விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 11.11.2022. தகுதியின் அடிப்படையிலேயே தேர்வு நடைபெறும், விண்ணப்பதாரர்கள் சிபாரிசு முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அவர்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்படமாட்டது.